www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

Dr. A. Vennila, Principal Hydeen Matric Hr. Sec. School
Melacauvery, Kumbakonam - Thanjavur District
(27.11.24)

TTK

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2024

**10** - ஆம் வகுப்பு

## தமிழ்

காலம் : 1.30 மணி

மதிப்பெண்கள் : 50

பகுதி - அ

அ) சரியான விடையை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுக. 7 × 1 = 7

1. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக மா.பொ.சி. கருதியது________.
   அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்
2. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருட்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்று பாராட்டப்படுவோர்
   அ) உதியன் : சேரலாதன் ஆ) அதியன் : பெருஞ்சாத்தான்
   இ) பேகன் : கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன் : திருமுடிக்காரி
3. தன் நாட்டுமக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன் என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள் ________.
   அ) மேம்பட்ட நிர்வாகத் திறன் பெற்றவர் அ) மிகுந்த செல்வம் உடையவர்
   இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர் ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்
4. இருநாட்டு அரசர்களும் தும்பைப்பூவைச் சூடிப் போர்புரிவதன் காரணம்
   அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரைகவர்தல்
   இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்
5. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம்
   அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

பாடலை படித்து வினா எண் 6, 7 க்கு விடையளிக்கவும்.

வண்ணமும் சுண்ணமும் தண்நறுஞ் சாந்தமும்
பூவும் புகையும் மேவிய விரையும்
பகர்வனர் திரிதரு நகர வீதியும் ;

6. இப்பாடலின் ஆசிரியர் ________________. அ) திருவள்ளுவர்
   ஆ) சீத்தலைச் சாத்தனார் இ) இளங்கோவடிகள் ஈ) இராஜகோபாலன்
7. வண்ணமும் சுண்ணமும் - இலக்கண குறிப்பு தருக.
   அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை இ) எண்ணும்மை ஈ) பெயரெச்சம்

பகுதி - ஆ

ஆ) எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளிக்கவும். 3 × 2 = 6

8. விடைக்கேற்ற வினா அமைக்கவும்.
   1. மெய்க்கீர்த்திகள் புலவர்களால் எழுதப்பட்டுக் கல்தச்சர்களால் கல்லில் பொறிக்கப்பட்டவை.
   2. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் அதியன் என்கிறார் ஔவையார்.
9. பாசவர் - வாசவர், பல்வணவிலைஞர், உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?
10. குறிப்புவரைக : அவையம்
11. காலக் கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது ?

இ) எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி. 2 × 2 = 4

12. வஞ்சிப்பாவிற்கு உரிய ஓசை தூங்கல் ஓசையாகும். துள்ளல் ஓசை கலிப்பாவிற்கு உரியது. - இத்தொடரை ஒரே தொடராக இணைத்து எழுதுக .
13. ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுக. 1. கும்பகோணம் 2. சைதாப்பேட்டை
14. கலைச்சொல் தருக : 1. Guild 2. Philosopher



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

பகுதி – இ

ஈ) ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளி. 1 × 3 = 3

15. முதல் மழை விழுந்ததும் என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவிபாடுகிறார்?

16. வாளித்தண்ணீர், சாயக்குவளை, கந்தைத்துணி, கட்டைத்தூரிகை – இச் சொற்றொடர்களை தொடர்புபடுத்தி ஒருபத்தி அமைக்க.

உ) ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளி. 1 × 3 = 3

17. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

18. அ) தூசும் துகிரும் ____எனத் தொடங்கும் பாடலை அடிபிறழாமல் எழுதுக.
(அல்லது ) ஆ) மாற்றம்________எனத் தொடங்கும் காலக்கணிதப் பாடலை எழுதுக.

பகுதி – ஈ

ஊ) எவையேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளி. 1 × 3 = 3

19. அவந்தி நாட்டு மன்னன், மருதநாட்டு மன்னனுடன் போர்புரிந்து அந்நாட்டைக் கைப்பற்ற நினைக்கிறான். அப்போர் நிகழ்வைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் இலக்கணத்தின் வழி விளக்குக .

20. உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார். – அலகீட்டு அட்டவணைப்படுத்துக.

பகுதி – உ

21. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக. 3 × 4 = 12



22. மின்வாரிய அலுவலருக்கு உங்கள் தெருவில் மின் விளக்குகள் பழுதடைந்துள்ளன அதனால் ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவண செய்யும்படி மின்வாரிய அலுவலருக்கு கடிதம் எழுதுக. (அல்லது) நாளிதழ் ஒன்றில் பொங்கல் மலரில் உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம் என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி அந்நாளிதழ் ஆசிரியருக்கு கடிதம் எழுதுக.

23. மாணவ நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்களும் அதனால் ஏற்படும் நன்மைகளை பட்டியலிடுக .( அல்லது )

மொழிபெயர்க்க : Among the five geographical divisions of the Tamil country in Sangam literature the marutham region was fit for cultivation as if had the most fertile lands. Probably of a former defended on getting the necessary sunlight, seasonal rain and the fertility of the soil. Among the elements of the nature sunlight was considered in dispersable by the ancient Tamils.

பகுதி – ஊ

எ) அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 2 × 6 = 12

24. சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும், அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக. (அல்லது )
"மாணவப் பருவமும் நாட்டுப் பற்றும்" என்ற தலைப்பில் ஒருபக்க அளவில் மேடை உரை எழுதுக.

25. சாதனைப் பெண்கள் உனக்குத் தெரிந்த ஏதேனும் மூவரைப் பற்றி விவரிக்க. (அல்லது) ராமானுஜர் வாழ்க்கை நிகழ்வுகள் சிலவற்றை தொகுத்து அவற்றில் உங்களின் கருத்துக்களை எடுத்துரைக்க.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com